## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிகளின் பயன்பாடு | |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| கடன் இல. 3267 | 76 | 10,688.32 | 63.45 | - | - |
| கடன் இல. 3268 | 74 | 10,407.04 | 400.00 | 2.3 | 332.50 |
| இலங்கை அரசாங்கம் | 40 | 5,625.44 | 75.00 | 0.5 | 71.54 |
| | **190** | **26,720.80** | **538.45** | **2.8** | **404.04** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கள வேலைகளை மேற்கொள்ளுதல், செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு நோக்கங்களிற்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் செயற்திட்டத்திற்காக நிபுணர் குழுவை ஆட்சேர்த்தல் மற்றும் விசேட உதவிகள் என்பவற்றிற்கு ரூபா 561 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இலும் கூட அந்த நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 சதவீத பௌதீக செயன்முன்னேற்றத்தை அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அத் திகதியிலுள்ளவாறு செயற்திட்ட நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 0.3 சதவீதமாக இருந்தது.

### 3.3 மேலதிகமாக ஏற்பட்ட செலவினங்கள்

வரிசை அமைச்சின் செயற்திட்டச் செயற்பாட்டுப் பிரிவின் பயன்பாட்டிற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்கான குளிரூட்டிகள் மற்றும் ஏனைய உபகரணங்களின் கொள்வனவுக்காக செலவிட்டப்பட்டிருந்த ரூபா 1.5 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் கிரயமாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

வசதி நிர்வாகக் கைநூலின் பிரகாரம், செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவின் பதவியணியினர் 143 பதவியணியினர் நிலையை கொண்டிருக்க வேண்டிய போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2015 யூலை 27 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் 158 பதவியணியினர் நிலை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் செயற்திட்டப் பணிப்பாளர்கள், செயற்திட்டக் கணக்காளர்கள் மற்றும் பொறியியலாளர்கள் உள்ளடங்கிய 30 அலுவலர்கள் மாத்திரமே 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.